


# வினாடி-வினா வித்தகர்

டாக்டர் நவீன் ஜெயக்குமார் – கல்வி







“பேரார்வம் எந்த வாய்ப்பையும் விடுவதில்லை” என்பது டாக்டர் நவீன் ஜெயக்குமார் வாழ்வில் கடைப்பிடிக்கும் கொள்கை ஆகும். ஒவ்வொரு நாளும் ஏதாவது கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உற்சாகமும், சாகச உணர்வும்; கிடைத்த தகவலுக்கு ஒரு ஜோடி இறக்கைகளைக் கொடுத்து, அதனுடன் தொடர்புடைய தகவல்களைப் பெறுதல்; அறிவின் வரைவுத்திரையை உருவாக்குதல் ஆகியவை ஒரு நல்ல வினாடி வினா கலைஞர் வளர்க்க வேண்டிய மிக அடிப்படையான திறன்கள் என்று அவர் விளக்குகிறார்.

டாக்டர் நவீன் ஜெயக்குமார் தொழில் ரீதியாக ஒரு கண் மருத்துவர். ஆனால், அவரது பெயர் “தி லேண்ட்மார்க்” வினாடி வினா போட்டி மற்றும் “முருகப்பா மெட்ராஸ் கோஷியன்ட்” வினாடி வினா போட்டி ஆகியவற்றின் அடையாளமாக உள்ளது. அவர் ஒரு வினாடி வினா போட்டியாளராக ஆகும் முன்பாகவே, வினாடி வினாக்களை நடத்தத் தொடங்கியதாக ஒப்புக்கொள்கிறார். அவர் ஒரு பியானோ இசைக்கலைஞர் மற்றும் ஆர்வமுள்ள சித்திரக் கலைஞர். தன்னால் முடிந்ததைச் செய்ய வேண்டும் என்ற முனைப்புடன், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கலைத்திறனையும் மேம்படுத்த உணர்வு பூர்வமான முயற்சியை மேற்கொள்கிறார்.

“நான் தேடும் வார்த்தைக்கு வருவதற்கு முன், வேறு பல வார்த்தைகளைப் பார்க்காமல், என்னால் அகராதியில் எந்த வார்த்தையையும் நேரடியாக பார்க்க முடியாது” என்று அவர் சொல்கிறார். அவர் வினாடி வினாக்கள் தயாரிப்பதற்கும் இதே யுக்தியை பயன்படுத்துகிறார். அவர் ஒரு தகவலைப் பெற்றபோது, அதன் பல்வேறு சூழல்களில் ஆழமாக மூழ்கி, இறுதியாக அந்தத் தகவலைத் தனக்கே உரிய முறையில் உரிமையாக்கிக் கொள்கிறார்.

ஆர்வமுள்ள வாசகர்களைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பதால், அவரை விரைவில் வினாடி வினா மாஸ்டர் ஆக்கக்கூடிய மனோபாவத்தைத் தூண்டுவதற்கு போதுமான புத்தகங்களும் உரையாடல்களும் இருந்தன. டாக்டர் ஜெயக்குமார், இந்திய வினாடி வினாவின் தந்தையான நீல் ஓ பிரையனின் தீவிர ரசிகர். அவர் வினாடி வினா கலையின் மூன்று "R" பயிற்சிகளான - வாசிப்பு (Read), பதிவு (Record) மற்றும் நினைவுகூர்தல் (Recollect) என்றவை, வினாடி வினாத் திறனை வளர்க்க மிகவும் முக்கியம் என்பதை மேற்கோள் காட்டுகிறார். முழு குடும்பமும், செய்தித்தாள் துணுக்குகள் மற்றும் தொடர்புடைய குறிகளால் நிரப்பப்பட்ட தகவல்களை, நாட்குறிப்பு புத்தகத்தில் பதிவிட்டு வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தது.

அவரது தாயார் சரண்யா ஜெயக்குமார் இந்தியாவின் முதல் மற்றும் முக்கியமான பெண் வினாடி வினா போட்டியாளர்களில் ஒருவர். அவர்கள் இருவரின், வினாடி வினா கலை ஈடுபாடுகள், கிட்டத்தட்ட ஒன்றாகத் தொடங்கின.

மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவனாக இருந்தபோது, வினாடி வினா நிகழ்ச்சியை அமைத்து நடத்தும் முதல் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. பிறகு, வருடாந்திர மெட்ராஸ் புத்தகக் கண்காட்சியில் வினாடி வினா போட்டிகளை நடத்தும் வாய்ப்புகள் தொடர்ந்து வந்தன. அதன் பின்பு, குறுகிய காலத்திற்குள்ளேயே, வரலாற்றாசிரியர் எஸ். முத்தையாவின் வழிகாட்டுதலின் கீழ், முருகப்பா குழுமத்தின் ஆதரவுடன், "350 ஆண்டுகால மெட்ராஸ்" என்னும் வினாடி வினா போட்டியை நடத்தும் வாய்ப்பைப் பெற்றார். இதுவே பிற்காலத்தில், வருடாந்திர "முருகப்பா மெட்ராஸ் கோஷியன்ட் வினாடி வினா" போட்டியாக பிரபலமாகியது. இந்த நிகழ்ச்சி நடந்தது 1988-89ல்.

கடந்த காலத்திலும், இப்போதும் கூட, பெரும்பாலான வினாடி வினாக்கள் ஒரு உண்மை மற்றும் சிறு தகவல் அடிப்படையிலான வடிவமைப்பைக் கொண்டிருக்கின்றன. இதில் ஒருவருக்குத் தெரிந்த அல்லது தெரியாத ஒரு தரவை நேரடியாகக் கேள்வி கேட்கும் முறை பயன்படுத்தப் படுகிறது. அவர் வினாடி வினா போட்டியை ஒரு விளையாட்டிற்கு ஒப்பிடுகிறார். உதாரணத்திற்கு, சதுரங்கம், சதுரங்கக் காய்களுடன் விளையாடப்பட்டால், வினாடி வினா என்பது சில தகவல்களுடன் விளையாடப் படுகிறது. இங்குள்ள உத்தி என்னவென்றால், ஒரு பதிலை எடுத்து அதைச் சுற்றி ஒரு கேள்வியை உருவாக்குவது ஆகும். அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து அறிவின் அடிப்படையில், பங்கேற்பாளர்கள் பல்வேறு துப்புகளின் அடிப்படையில், தங்கள் பதிலை உருவாக்க முடியும். பக்கவாட்டு சிந்தனை என்பது, இந்த வினாடி வினா வடிவமைப்பில் மிக முக்கியமான பங்கை வகிக்கிறது.

இந்தியாவின் வினாடி வினா அறக்கட்டளை (QFI), 1987 -ல் சென்னை அத்தியாயத்தை உருவாக்கியது. பல தலைமுறையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான உற்சாகமான நபர்களுடன், இந்த தனித்துவமான வினாடி வினா விளையாட்டு, அமைதியாக வளர்ந்தது. QFI -ன் முதல் ஆண்டு விழாவும், ஆரவாரத்துடன் சேர்ந்து கொண்டாடப் பட்டது. 1988 ஆம் ஆண்டில், லேண்ட்மார்க்-QFI வினாடி வினா போட்டி, முதன்முதலாக ஒளி-ஒலி கருவிகள் ஆதரவுடன் நடைபெற்றது. இது உண்மையில் சென்னையில் உள்ள வினாடி வினா சமூகத்திற்கு ஒரு



திருப்புமுனை ஆண்டாகும். 1995 இல், அதை ஒரு வருடாந்திர நிகழ்வாக மாற்றுவதற்கான முடிவு எடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி, லாண்ட்மார்க்-QFI வினாடி வினா போட்டி நடைபெறும். இந்த வருடாந்திர நிகழ்வை, ரசிகர்களின் உற்சாகமும், போட்டியாளர்களின் ஆர்வமும் அதை கொரோனா பெருந் தொற்று காலத்திலும் நிகழச் செய்தது. இது புதிய "ஆன்லைன் வினாடி வினா போட்டி" வகையைத் உருவாக்கியது.

வினாடி வினா போட்டியின் வடிவம் மட்டுமல்லாமல், புரவலர்களும் கூட பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளார்கள் என்று டாக்டர் ஜெயக்குமார் கருதுகிறார். அவரும், அவரது தலைமுறையும் தகவல்களின் முதன்மை ஆதாரமாக புத்தகங்கள் மற்றும் அச்சு ஊடகங்களை பெரிதும் நம்பியிருந்தனர். இணையத்தின் வருகையால், இளம் வினாடி வினா போட்டியாளர்கள், "பாட்காஸ்ட்" ஒலிப்பதிவுகள், காணொளி வீடியோ பதிவுகள் போன்ற வடிவங்களில், தங்கள் விரல் நுனியில் அறிவுப் பெருங்கடலைத் திறக்க வழிகளை வைத்துள்ளனர். பழைய உறுப்பினர்கள், டிஜிட்டல் தளங்களைத் தழுவவும், இளையவர்கள் வாசிப்புப் பழக்கத்தைப் பெறவும், குறிப்பாக பக்கவாட்டு வாசிப்பை வளர்க்கவும் அவர் பரிந்துரைக்கிறார்.

கொரோனா பெருந்தொற்று காலத்திற்குப் பின், வினாடி வினா போட்டிகளை அமைக்க, அவருக்கு உதவி செய்ய, ஒரு புதிய பலவித மாறுபட்டவர்களின் குழு அமைக்க, உற்சாகமான இளைஞர்களை அவர் அடையாளம் கண்டுள்ளார். இது, பழைய வினாடி வினா மாஸ்டர்கள் மற்றும் இளைய பங்கேற்பாளர்களின் நலன்களுக்கு இடையிலான தொடர்பின்மை பிரச்சினையையும் தீர்க்கும். புதிய எண்ணங்கள், வினாடி வினா விளையாட்டின் பயன்முறைக்கும் வேகத்திற்கும் ஒரு புதிய முன்னோக்கைக் கொண்டுவரும் என்று அவர் உண்மையாக நம்புகிறார். இந்த புதிய குழுவின் பங்களிப்பில் உருவான "கிளாஸ் ஆக்ட் 2022", ஹிந்துஸ்தான் டைம்ஸ் குடியரசு தின வினாடி வினா போட்டி - அற்புதமான வெற்றி ஆயின. மேலும், இது ஆசியா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் மற்றும் லிம்கா புக் ஆஃப் ரெக்கார்ட்ஸில் பதிவாகியுள்ளது.

இன்று, சொந்த வீட்டில் அமர்ந்துகெண்டே நார்வே மற்றும் பின்லாந்தில் வினாடி வினா போட்டிகளில் பங்கேற்க முடியும். இப்போது, அவர்களின் நண்பர்களை சந்திக்கவும் மற்றும் சர்வதேச அரங்கில் நேர்முக வினாடி வினா போட்டிகளில் பங்கேற்கவும், தனிப் பயணம் செய்ய நேரம் ஒதுக்குகிறார்கள். ஒருவேளை இது வினாடி-வினா போட்டி சார்ந்த சுற்றுலாவின் தொடக்கமாக இருக்கலாம்!

வினாடி வினா கலையில் பெண்களின் பங்கு என்ற விஷயத்தில், அவர்களுக்கு பல்வேறு ஆர்வங்கள் இருந்தாலும், மற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதால்,



வினாடி வினா போட்டியில் அவர்களின் பங்களிப்பு மற்ற முன்னுரிமைகளால் அடிக்கப்படுகிறது. ஒரு பெண்ணின் மனம் செயல்படும் விதம் மிகவும் வித்தியாசமானது என்றும், வினாடி வினாவை அமைக்கும் போது அந்த தனிச்சுவையை கொண்டு வருவது முக்கியம் என்றும் அவர் வலியுறுத்துகிறார். எனவே, அவர் தனது தற்போதைய ஆராய்ச்சி குழுவில் பெண் உறுப்பினர்களையும் கொண்டுள்ளார். அவர் பெண்களின் தனித்துவமான சிந்தனை முறையை, வினாடி வினாவில் உட்புகுத்த விரும்புகிறார். இப்போது பெண்களுக்காகவே வினாடி வினா மன்றங்கள் உள்ளன. அங்கு முழு வினாடி வினா போட்டியும் பெண்களால் அமைக்கப்பட்டது. அவற்றில், "HERd of Quizzers" என்று அழைக்கப்படும் வாட்ஸ்அப் குழு மிக முக்கியமான ஒன்று.

ஒரு வினாடி வினா நிகழ்வின் வெற்றியில் மொழியும், உள்ளடக்கமும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றையொன்று பெரிதும் பாதிக்கின்றன. 80% முதல் 90% வினாடி வினா நிகழ்வுகள் ஆங்கிலத்தில் உள்ளன. இதற்குக் காரணம், கடந்த காலத்தில், பொது வகை வினாடி வினா எப்போதும் மேற்கத்திய உலக அடிப்படையிலான அறிவு/உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. சமீபத்திய ஆண்டுகளில், பள்ளி வினாடி வினாக்களில் அதிக இந்திய உள்ளடக்கங்களை அவர் உணர்வுபூர்வமாகச் சேர்த்துள்ளார். அதாவது 40% முதல் 50% வரை இந்திய உள்ளடக்கங்கள் இருக்கும்படி வினாடி வினா நிகழ்வை உருவாக்குகிறார். இது, ஒருவரின் சொந்த நாடு மற்றும் பாரம்பரியம் பற்றிய கூடுதல் அறிவை வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் உதவும். இதற்கு எடுத்துக்காட்டாக, அவர் சமீபத்தில் நடத்திய "கோவை கோஷியன்ட்" வினாடி வினா போட்டியில் பங்கேற்பாளர்களின் மிகுந்த உற்சாகத்தை அவர் மேற்கோள் காட்டினார். பெருநகரங்களில் உள்ள குழந்தைகளுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கும் போது, உள் நகரங்களில் உள்ள பள்ளிப் பிள்ளைகள், இந்த வகையான வெளிப்பாடு மற்றும் அவர்களின் திறமையை வெளிப்படுத்த ஒரு தளத்திற்காக வேட்கைப் பசியுடன் உள்ளனர். மேலும் அவர்கள் பேரார்வத்துடன், மன எழுச்சியுடன் இருக்கிறார்கள். அடுத்த கட்டமாக, மேலும் பிராந்திய மொழிகளில் வினாடி வினா கலையை வளர்க்க முயற்சி எடுக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் நரம்பியல் வேறுபட்ட நபர்களை மறுவாழ்வு செய்வதற்கான ஒரு கருவியாக வினாடி வினாவைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு குறித்து அவர் விழைகிறார். அதுவும், அவர்களின் நிலைமை மிகவும் மோசமாக இல்லாமலும், அல்லது முன்கூட்டியே கண்டு பிடிக்கப்பட்டிருந்தாலும் மட்டுமே இந்த உத்தியை பயன்படுத்தலாம். குறிப்பாக குழந்தைகளில், சிறுவயதிலிருந்தே ஒத்திசைவுகளை உருவாக்கவும், வலுப்படுத்தவும் வினாடி வினா போன்ற தூண்டுதல்கள் பயன்படுத்தப்படலாம்.

வழக்கமான கல்வி முறையில், புத்தகங்கள் மற்றும் இணைய அடிப்படையிலான அறிவு தவிர, நிபுணர்களின் விரிவுரைகளை, பள்ளிகளில் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக கொண்டு வரலாம். முயற்சிகள், வெற்றி மற்றும் தோல்விகள், அற்புதமான தருணங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் மற்றும் உடனடி நேரடி கேள்விகள், பதில்கள் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றால் நிரம்பிய தொடர்பு நிகழ்ச்சிகள் கல்வித் திறனை மேம்படுத்தும். அத்தகைய தொடர்புகள், பள்ளியில் கற்பிக்கப்படும் பாடங்களின் பொருத்தத்தை தெரிவிக்கவும், மாணவர்கள் தங்களின் சொந்த பலங்கள் மற்றும் பலவீனங்களை அடையாளம் காணவும், மேலும் அவர்கள் ஒருபோதும் அறியாத ஒரு புதிய ஆர்வத்தைத் வெளிப்படுத்தவும் உதவும்.

வினாடி வினாவை அமைப்பது எவ்வளவு கடினமாக இருந்தாலும், சவாலாக இருந்தாலும், வெற்றி மற்றும் அறிவை செயல்படுத்தும் உயர்நிலைகள், பதில் கிடைத்த மகிழ்ச்சியைப் பார்ப்பது போன்றவைதான் உண்மையான வெகுமதி என்று அவர் கூறுகிறார். இதற்காகத்தான், அவர் உண்மையிலேயே ஒரு சாம்பியன்!

விநாயகமூர்த்தி சொக்கநாதன்